

# நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் சிறப்பிதழ்!





## தலைசிறந்த பகுத்தறிவாளர்

கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷம், மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகத்தின் பெருமை போற்றப்படுவதற்குக் காரணம் நமது கலைஞரின் தனித்திறமையாகும்.

கலைஞர் அவர்கள் நமக்கு கிடைத்ததற்கரிய வாய்ப்பு என்று சொல்ல வேண்டும். இதற்கு முன் ஆட்சியில் இருந்தவர்களைவிடப் பகுத்தறிவாளராவார், மனிதர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது நம்பிக்கையாளர்கள், பகுத்தறிவாளர்கள் என்பதாகும்.

நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதி ஆவார். இந்தியாவை எடுத்துக் கொண்டால் இந்தஒருமாநிலத்தைத்தவிரமற்றமாநிலங்களில்நடைபெறுகிற ஆட்சியாவும். நம்பிக்கையாளர் ஆட்சியாகும்.

நம் நாட்டில் மட்டும்தான் நம்பிக்கையான பகுத்தறிவாளர் ஆட்சி நடக்கிறது.

தி.மு.க. ஆட்சியின் கொள்கை நமது மக்களுக்கு நன்மை செய்வதேயாகும். இந்தியாவில் இந்த மாநிலம்தான் அமைதியோடு இருக்கிறது. இது தி.மு.கழகத்திற்குப் பெருவெற்றி என்றால் அது கலைஞர் அவர்கள் தனது சாதுர்யத் திறமையால் பெற்றதாகும்.

இத்தகைய பகுத்தறிவாளராகவும் ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும். முன்யோசனையுடனும் அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்கட்குப் புதுவாழ்வு தருபவர் ஆகிறார் நமது கலைஞர்!

**–தந்தை பெரியார், 1974**



## மக்களாட்சிக்கு விரோதமான சக்திகள்

சட்டமன்றத் துறை, நீதித் துறை, நிர்வாகத் துறை மற்றும் பத்திரிகைகள் துறை என நான்கு தூண்களே மக்களாட்சி எனும் மணி மண்டபத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தத் தூண்கள் எத்தகைய தூய்மையான நோக்கத்தை தாங்கிப் பிடிப்பதற்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் இந்த நூற்றாண்டில் மிகப் பெரும் சோதனைக்குள்ளாகி சவால்களை எதிர்நோக்கி உள்ளன.

சோதனைகளில் வென்று பொன்னாக மிளிர வேண்டிய அந்தத் தூண்கள் தற்போது துருப்பிடிக்கத் தொடங்கிவிட்டன. அதற்குக் காரணம் நமது சமுதாய அனைத்துப் பகுதிகளிலும் ஊடுருவி இருக்கும் மக்களாட்சிக்கு விரோதமான சக்திகளே காரணம். அவை இந்தச் சமுதாயத்தை உருக்குலைத்து வருகின்றன என்பதுதான்.

இந்த எதிர்மறைப் பாதிப்பை எப்பாடுபட்டேனும் தடுத்து நிறுத்தி மக்களாட்சியின் நான்கு தூண்களிலும் நல்ல ஆரோக்கியத்தை மீட்டெடுக்கவும், சமயச் சார்பற்ற ஜனநாயக சோஷலிச சக்திகள் ஒன்றுதிரள வேண்டும். அதற்காக நமது நாட்டின் இளைஞர்கள் எத்தகையதியாகத்தையும்செய்யஉறுதிமேற்கொள்ளவேண்டுமென விரும்புகிறேன்.

**–முத்தமிழறிஞர் கலைஞர் 3.6.2016**



## தன்னை வெல்வான் – தரணியை வெல்வான்

கொடுமைகள் இழைக்கப்படும்போது. அநீதி தலைவிரித்தாடும் போது, அக்கிரமம் தம் அகன்ற வாயினைத் திறந்து அகோரக் கூச்சலிடும் போதெல்லாம் இறுதியில் நன்மைக்கே என்ற தத்துவத்தைத் துணைக்கழைத்துச் சமாதானம் தேடிக்கொள்ள முடியவில்லை. காரணம், நாம் ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையிலே மட்டும் இருந்து வருபவர்கள் அல்லர். பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாகி விட்டிருக்கிறோம். அதனால் நம்மில் சிலருக்கு இழைக்கப்படும் கொடுமை. நம் எல்லோருடைய உள்ளத்தையும் வேதனையில் ஆழ்த்திவிடுகிறது.

அடக்குமுறையை வீசி அறப்போர் வீரர்களை அடக்கி விடவோ, அவர்தம் பாசறையை ஒழித்துவிடவோ முடியாது. இது மிக எளிதாக எவருக்கும் புரிந்திடும் உண்மை என்றாலும், அரசாள்வோர் அதிலும் தமது பிடி தளர்ந்து வருவதை உணர்ந்து பீதி கொண்டுள்ள நிலையிலுள்ள அரசாள்வோர் உண்மையினை மறந்து விடுகின்றனர்.

சிறைக்கோட்டம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ, உறுதி பன் மடங்கு கொண்டவர்களாவது மட்டுமல்ல: தன்னைப் பற்றிய எண்ணம், தனது நலனைப் பற்றிய நினைப்பு, தனது குடும்பம் பற்றிய எண்ணம், இவைகளைக்கூட மறந்துவிடவும், தான் தனக்காக அல்ல, மற்றவர்களுக்காகவே என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும், தன்னைப் பற்றிய எண்ணம் எழுப்பிவிடும் ஆசை, அச்சம், கவலை. கலக்கம், பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவுமான ஒரு துறவு நிலையைப் பெற்றளிக்கிறது. இது பற்றியே ஆன்றோர். சிறைச் சாலையை அறச்சாலை என்றனர்.

பாளையங்கோட்டைச் சிறைவாயிலில் (கலைஞர்) கண்டேன் இந்தப் பேருண்மையை உணர்த்தும் எழுத்தாரத்தை, அங்கு பொறிக்கப்பட்டிருப்பது என்ன?

“தன்னை வெல்வான்! தரணியை வெல்வான்!”

**– பேரறிஞர் அண்ணா**

(முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாளை சிறையில் அடைக்கப்பட்டு இருந்த போது சிறையில் கலைஞர் அவர்களை சந்தித்த பின் பேரறிஞர் அண்ணா கூறியது)



# எல்லாரையும் ஈர்த்த எல்லார்க்குமான தலைவர்

## – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்

வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய் தோன்றி -

வாழும் காலத்தில் ஒளி தரும் உதய சூரியனாக வாழ்ந்து -

நிறைந்த பிறகும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக் கொண்டிருப்பவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள்!

**கலைஞர் என்பவர் ஒருவரல்ல. ஒருருவத்தில் வாழ்ந்த பல உருவம் கலைஞர்!**

**அரசியலா?**

ஐம்பது ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்.

ஐந்து முறை தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்; சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்; எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

**திரையுலகமா?**

கதை எழுதினார்; கதை வசனம் எழுதினார்; பாடல்கள் எழுதினார்; திரைப்படங்களை தயாரித்தார்.

**நாடகமேடையா?**

நாடகங்களை தயாரித்தார்; கதை வசனம் எழுதினார்; நடிக்கவும் செய்தார்.

**பத்திரிகை உலகமா?**

பத்திரிகையை நடத்தினார். பத்திரிகை ஆசிரியராகவும் இருந்தார். எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் இயங்கினார்.

**.இலக்கியமா?**

கவிஞர்- -சிறுகதை ஆசிரியர்- நாவலாசிரியர்- உரையாசிரியர் என அனைத்திலும் முத்திரை பதித்தார்.

**அதனால்தான் ஒருருவத்தில் வாழ்ந்த பல உருவம் கலைஞர் என்று சொன்னேன் !**

அவர்தான் இன்று நாம் காணும் நவீன தமிழ்நாட்டை உருவாக்கினார்.

இன்று நாம் பார்க்கும் எத்தனையோ திட்டங்கள்-

சட்டங்கள் - சலுகைகள்- உரிமைகள் - கொடைகள்-

உயர்வுகள்- ஏற்றங்கள்- மலர்ச்சிகள்-

மறுமலர்ச்சிகள்- புத்தாக்கங்கள் - நிறுவனங்கள் - பள்ளிகள்- கல்லூரிகள்- மருத்துவக் கல்லூரிகள்- பல்கலைக் கழகங்கள்- என பலதும் கலைஞரால் உருவாக்கப்பட்டவை. அவர் துளி மையால் விளைந்தவை.

வியர்வை சிந்தி இந்த இனத்துக்காக உழைத்தார்.

ஒரு துளி மையில் இந்த மாநிலத்தை வளர்த்தார்.

அதனால்தான் நிறைவாழ்க்கைக்குப் பிறகும் நினைவு கூரப்படுகிறார்.

**புகழால் அல்ல-**

**செயலால் மறக்க முடியாத தலைவர் அவர்.**

**அதிகாரத்தால் அல்ல-**

**அன்பால் போற்றப்படும் தலைவர் அவர்.**

‘அன்பார்ந்த....’என்று சொல்லத் தொடங்கியதும் லட்சக்கணக்கான தொண்டர்களின் உடலில் மின்சாரம் பாய்கிறது என்றால்...

‘என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே!’ என்று விளிக்கும் போது உடல் முழுவதும் ரத்தமாற்றம் நடக்கிறது என்றால்..

அவர் அஞ்சுகத் தாயின் மைந்தன் மட்டுமல்ல

தமிழ்த்தாயின் புதல்வன் அல்லவா?

95 ஆண்டுகள் தமிழ்நாட்டை காலால் அளந்தவர்.

தோளில் சுமந்தவர்.

**இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக மாற்றியவர்.**

தமிழ்நாட்டின் எந்த ஊருக்குச் சென்றாலும் அவர் கல்வெட்டு இல்லாத ஊர் இல்லை.

அவர் சொல்வெட்டு கேட்காத மனிதரில்லை.

அவர் சொற் கேட்டு படிக்காத ஆளில்லை.

**எல்லாரையும் ஈர்த்த எல்லார்க்குமான தலைவர் அவர்.!**

**(3.6.2024- கலைஞர் நூற்றாண்டு நிறைவு- பிறந்தநாள்)**